சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
அசல் வழக்கு எண்.143/2014

பெயர். ஜெயக்குமார் (DW2) நாள்: 11.02.2020

**<u>பி.வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

என்னுடைய வயது 51. நான் கால்நடை பராமரிப்பு துறையில் வேலை செய்து வருகிறேன். நான் அனுமதி பெற்றுதான் வந்திருக்கிறேன், எனக்கு 12 மணிவரை தான் மருத்துவமனை. நான் மதுராந்தகத்தில் உள்ள தர்மராஜா கோவில் தெருவில் குடியிருக்கிறேன். ஆறுமுகம் என்பவருக்கும் எனக்கும் பழக்கம் இல்லை என்றால் அவரை எனக்கு தெரியும். அவருக்கும் எனக்கும் நல்ல பழக்கமா என்று கேட்டால் நான் அவருடைய கடைக்கு செல்வேன். ஆறுமுகம் என்பவர் எங்கு கடை வைத்திருந்தார் என்றால் மதுராந்தகம் பேருந்து நிலையத்தில் ஆனந்தபவன் என்ற உணவகம் வைத்திருந்தார். ஆறுமுகத்திற்கு வயதானதால் மேற்படி உணவகம் நடத்துவதை நிறுத்திவிட்டார் என்றால் அவருடைய பிள்ளைகள் நடத்தி வந்தார்கள. எந்த பிள்ளை நடத்தி வந்தார் என்று கேட்டால் 1வது பிரதிவாதி நடத்தி வந்தார். அந்த வகையில் நான் கடைக்கு செல்லும் போது எனக்கு பழக்கமா என்றால் ஆமாம். ஆறுமுகம் வாழ்ந்த போது எங்கு வாழ்ந்து வந்தார் என்றால் சிறுகளத்தூர் கிராமத்தில் வாழ்ந்து வந்தார். ஆறுமுகமும் வாதியும் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள் என்றால் தற்போது குணசேகரன் மருவத்தூரில் குடியிருக்கிறார், அதற்கு முன்பு ஆறுமுகமும், வாதியும் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தார்கள். பி.சா.ஆ.4 எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் குணசேகரனும் ஆறுமுகமும் வசித்து வந்தார் என்றால் உயில் எழுப்பட்ட நாளில் வாதி குணசேகரன் அந்த வீட்டில் இல்லை. எங்கு சென்றிருந்தார் என்றால் எனக்கு தெரியாது. வாதி குணசேகரனின் மனைவி அன்றைய தினம் வீட்டிலிருந்தாரா என்றால் இல்லை. 1வது பிரதிவாதி வடராயன் தெருவில் குடியிருக்கிறார் என்றால் இல்லை, உணவகம் வைத்து மட்டும் தான் நடத்தி வருகிறார். 1வது பிரதிவாதி வடராயன் தெருவில்

தான் இன்றைய தேதிவரை குடியிருந்து வருகிறார் என்றால் பகலில் உணவகம் நடத்திவிட்டு இரவில் சிறுகளத்தூர் சென்றுவிடுவார்கள். உயில் எழுதுவதற்கு 1வது பிரதிவாதி என்னை அழைத்தாரா என்றால் ஆறுமுகம் என்னை அழைத்து வரசொன்னார். ஆறுமுகம் என்னை எப்படி அழைத்து வரசொன்னார் என்றால் 1வது பிரதிவாதி குமாரிடம் சொல்லி என்னை அழைத்து வரசொன்னார். நான் 11 மணிக்கு ஆறுமுகம் வீட்டிற்கு சென்றேன். நான் சென்ற போது ஆறுமுகம் நாயக்கர், மாரிபுத்தூர் குப்புசாமி முதலியார், ஜெயகுமாரர் இருந்தார்கள். மேலும் உயில் எழுதுவதற்காக சாந்தி சிவப்பிரகாசம் மற்றும் வழக்கறிஞர் நீலமேகம் வந்திருந்தார். வழக்கறிஞர் உயிலை எழுதவில்லை, சாந்தி சிவப்பிரகாசம் தான் உயிலை எழுதினார். எத்தனை மணிக்கு உயில் எழுத ஆரம்பித்தார்கள் என்றால் 11 மணிக்கு எழுத ஆரம்பித்தார்கள். ஆறுமுக நாயக்கர் 1998லிருந்தே நோய்வாய் பட்டு மலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்றால் இல்லை. அவர் உயில் எழுதும்போது நன்றாக தான் இருந்தார். சாட்சி தானாக முன்வந்து உயில் எழுதுவதற்கு முன்பு ஆறுமுகம் நாயக்கர் எப்படி இருந்தார் என்று தனக்கு தெரியாது என்று கூறுகிறார். உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் காலக்கட்டத்தில் ஆறுமுகம் நாயக்கர் நினைவு திறன் இல்லாமலும் பேசுவதற்கு இயலாத நிலையிலும் இருந்தார் என்றால் சரியல்ல. ஆறுமுக நாயக்கருக்கு 4 பிள்ளைகள். ஆறுமுக நாயக்கர் மேற்படி 4 பிள்ளைகளையும் உயில் எழுதும்போது அழைத்தாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. பி.சா.ஆ.4ல் உயிலின் வாசகங்களின் படியே எந்த நேரத்திலும் என்ன வேண்டுமென்றாலும் நடக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆறுமுக நாயக்கர் அப்படி ஒரு வாசகத்தை சொல்லவில்லை. உயில் எழுதுவதற்கு முன்பு மருத்துவ செலவுகளை யார் செய்தார்கள் என்றால் ஆறுமுக நாயக்கர் அவருக்கான செலவுகளை குமார் செய்ததாக என்னிடம் தெரிவித்தார். ஆறுமுக நாயக்கர் என்ன சொல்லி உயில் எழுதச்சொன்னர் என்றால் பிரதிவாதி குமார் அவருக்கான செலவுகளை செய்வதாகவும் அதற்காக அவருடைய சொத்துக்களை பிரதிவாதி குமாருக்கு

எழுதிவைப்பதாகவும் நாங்கள் அதனை செய்து தரும்படி அவர் கேட்டார். மேற்படி உயிலில் சிறுகளத்தூரில் உள்ள வீட்டையும், கருணாகரவிலாகத்தில் உள்ள மனையையும் எழுதி வைத்தார். அதைத்தவிர வேறு சொத்துக்கள் ஆறுமுக நாயக்கருக்கு இருந்ததா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. ஆறுமுக நாயக்கருக்கு மூன்று பெண் குழந்தைகள். ஆறுமுக நாயக்கர் தான் மேற்படி மூன்று பெண்குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. மேற்படி மூன்று பெண் குழந்தைகளின் பெயர் எனக்கு தெரியாது. மேற்படி மூன்று பெண் குழந்தை பற்றிய விவரங்கள் உயில் எழுதும் போது பேசப்படவில்லை. உயில் எழுதும்போது அவருடைய பெண் குழந்தைகளை பற்றி ஆறுமுக நாயக்கர் எதுவும் சொல்லவில்லை. ஆறுமுக நாயக்கரின் மனைவி பெயர் சொக்கம்மாள். உயில் எழுதும்போது ஆறுமுக நாயக்கரின் மனைவி உடனிருந்தார். மேற்படி உயிலை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் உயில் வாசகங்கள் சொல்ல சாந்தி சிவப்பிரகாசம் எழுதினார், அதனை படித்து காண்பித்துவிட்டு அதிலுள்ள வாசகங்களை தட்டச்சு செய்து எடுத்துவருதாக சாந்தி பிரகாசம் சென்றார். பின்பு தட்டச்சு செய்த ஆவணத்தை சாந்தி எடுத்து வந்து ஆறுமுக நாயக்கரிடம் படித்து காண்பித்தார். அவ்வாறு படித்து காண்பித்த போது அந்த உயிலில் ஆறுமுக நாயக்கரின் மனைவி மற்றும் மகள்களை பற்றிய எந்த விவரத்தையும் சொல்லவில்லையா என்று கேட்டால் சொல்லவில்லை. நான் மேற்படி உயிலில் முதலாவது சாட்சியா என்றால் இல்லை, மாரிபுத்தூர் குப்புசாமி முதலியார் தான் முதலாவது சாட்சி. என்னுடைய சரியான பெயர் ஜெயகுமார். என்னால் என்னுடைய ஆதார் அட்டையை தாக்கல் செய்யமுடியும். என்னுடைய பெயர் ஜெயகுமார் இல்லை என்றால் சரியல்ல. மதுராந்தகத்தில் பத்திரம் எழுதுவதற்கு அதிக நபர்கள் இருக்கும் போது தொலைவிலிருந்து நபரை ஆவணம் எழுத அழைத்துவருவதற்கான அவசியம் என்ன என்று கேட்டால் அவரும் 15 கி.மீ தூரத்தில் தான் உள்ளார். ஆறுமுக நாயக்கரின் முதல் மகன் மணிவண்ணன் இறந்துவிட்டார். இறந்துபோன மணிவண்ணன் பற்றி விவரங்களையும் உயிலில் எதுவும்

சொல்லப்படவில்லை. உயில் கையால் எவ்வளவு நேரம் எழுதப்பட்டது என்றால் 1 மணி நேரமானது, தட்டச்சு செய்து எடுத்துவர அரை மணி நேரமானது. மேற்படி உயிலை தயார் செய்த போது நீலமேகவண்ணன் வரவில்லை என்றால் சரியல்ல. நீலமேகவண்ணன் உயிலில் மேலொப்பம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. உயில் பொய்யானது என்பதால் தான் வழக்கிற்கு பின்னிட்டு நீலமேகவண்ணனிடம் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. பி.சா.ஆ-4 உயிலானது 2015 வருடத்திற்கு பின்பு வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 உயிலானது உண்மையான ஆவணம் இல்லை என்றும் அதில் சொல்லப்பட்டுள்ள விவரங்களின் படி அந்த உயில் எழுதப்படவில்லை என்றும் மேற்படி உயில் பொய்யான உயில் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4ல் உள்ள அனைத்து கையெழுத்துக்களும் ஒரே பேனாவால் போடப்பட்டது. நான் 1வது பிரதிவாதிக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ-4ல் உள்ள கையெழுத்து ஆறுமுக நாயக்கரின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. சிறுகளத்தூர் என்பது மதுராந்தகம் நீதிமன்றத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். ஏன் உயில் பதிவு செய்யப்படவில்லை என்றால் அதற்கான காரணம் எனக்கு தெரியாது. உயில் பதிவு செய்யப்படாததற்கான காரணத்தை என்னிடம் தெரிவிக்கவில்லை. உயிலை பதிவு செய்வது நல்லது என்று வழக்கறிஞர் ஏதேனும் கூறினாரா என்றால் இல்லை. வழக்கறிஞர் எழுதப்பட்ட்ட உயிலில் இடது பக்கம ஒரு கையெழுத்து செய்தார், உயிலின் பின் பக்கத்தில் கையெழுத்து செய்து முத்திரை வைத்தார். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு பி.சா.ஆ-4 உயில் பதிவு செய்யப்படவில்லை என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது.

(மறு விசாரணை இல்லை)